**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. I**
**DINDIGUL.**

**STC.No.2032/2024**

**Prosecution Witness :8**

| | | | |
|---|---|---|---|
| **Name** | : பிரபாகரன் | **Caste** | : |
| **Father's Name** | : செல்லப்பாண்டி | **Calling** | : சார்பு ஆய்வாளர்- நகர்வடக்கு காவல் நிலையம் |
| **Village** | : திண்டுக்கல் | **Religion** | : |
| **Taluk** | : | **Age** | : 33 |
| | | **Dated** | : 20.07.2026 |

**20.07.2026.**

இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

பட்டியல் சாட்சி–10 திரு.**பிரபாகரன்** ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு அ.சா.8 ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

**எதிரி ஆஜரில்லை. 355 BNSS Petition filed and allowed.**

1. நான் தற்போது திண்டுக்கல் நகர்வடக்கு காவல் நிலைத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன்.இதற்கு முன்பு திண்டுக்கல் தாலுகா காவல் நிலைத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்தேன். கடந்த 10.05.2024 ம் தேதி தாலுகா காவல் நிலையத்தில் தலைமை காவலராக வேலுமணி நிலைய பொறுப்பில் இருந்தபோது திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் இருந்து வரப்பெற்ற மருத்துவ தகவலை பெற்று அங்கு சென்று உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த பாலகிருஷ்ணனிடம் பெற்று வந்த புகார் வாக்குமூலத்தின் அடிப்படையில் நிலைய குற்ற எண் 323/2024 சட்டபிரிவு 279,337 இதச ன் படி வழக்கு பதிவு செய்துள்ளார்.பின்னர் இவ்வழக்கை எனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றைய தினம் காலை 14.00 மணிக்கு சம்பவ இடம் சென்று பட்டியல் சாட்சிகள் வெங்கடசுப்பிரமணியன், நந்தன் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்தேன். சாட்சிகள் பாலகிருஷ்ணன், அன்னப்புரணி, பிச்சைமுத்து, சங்கரலிங்கம், வெங்கடசுப்பிரமணியன், நந்தன் மற்றும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த தலைமை காவலர் வேலுமணி ஆகியோர்களை தனிதனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 12.05.2024 ம் தேதி பகல் 11.15 மணிக்கு நிலையத்தில் ஆஜரான எதிரி ஜெப்பிரிநிஷாந்தை காரணம் கூறி கைது செய்து நிலைய ஜாமீனில் விடுவித்தேன். இவ்வழக்கில் சம்மந்தப்பட்ட வாகனங்களான TN 57 BA 9708 என்ற Hero Splender இருசக்கர வாகனத்தையும் TN 75 Y 7426 என்ற ரெனல்ட் டஸ்டர் காரையும் ஆய்வு செய்து ஆய்வு அறிக்கை வழங்கிய மோட்டர் வாகன ஆய்வாளர் இளங்கோ என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் இவ்வழக்கில் காயம்பட்ட

நபர்களுக்கு சிகிச்சை அளித்து விபத்து பதிவேடு மற்றும் காயச்சான்று வழங்கிய மருத்துவர் பரணிதரன் என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பாலகிருஷ்ணன் மற்றும் சேதவ் ஆகியோர்களுக்கு ஏற்பட்ட காயம் சொற்ப காயம் எனவும், சிறுவன் சஷாந்த் ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என சான்று வழங்கியுள்ளார். அன்னபுரணி என்பவர் சிகிச்சையில் இருந்து சென்று விட்டதால் அவருக்கு ஏற்பட்ட காயத்திற்கு சான்று வழங்கவில்லை. மேற்படி சான்றுகளின் அடிப்படையில் இவ்வழக்கின் சட்டபிரிவுகள் 279,337 இதச என்பதை சட்டபிரிவுகள் 279,337(3 counts), 338 இதச என சட்டபிரிவு மாறுதல் அறிக்கை தாக்கல் செய்தேன். பின் எனது விசாரணை முடித்து எதிரிகள் மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார். **(வரைபடம் அதசாஆ.4, காயச்சான்று அதசாஆ.5 முதல் 8, மோட்டார் வாகன அறிக்கைகள் அதசாஆ.9,அதசாஆ.10, சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அதசாஆ.11, ஆக குறியீடு செய்யப்படுகிறது. )**

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

புகாரிலும் எனது விசாரணையிலும் வாதியின் வாகனத்தில் பின்புறம் மோதியதாக குறிப்பிட்டுள்ளார்கள் என்றால் சரிதான். மோட்டார் வாகன ஆய்வாளர் இருசக்கர வாகனத்திற்கு வழங்கிய ஆய்வு அறிக்கையில் இருசக்கர வாகனத்தின் பின்புறம் எவ்வித டேமேஜ் இருப்பதாக சான்று வழங்கவில்லை என்றால் சரிதான். எனது விசாரணையின் படி வழக்குச்சம்பவம் திருச்சி புறவழிச்சாலையில் இருந்து நந்தவனம்பட்டி சாலையில் செல்லும் வழியில் K.M.A நகருக்கு முன்னதாக நடந்துள்ளதாக உள்ளது என்றால் சரிதான். D mart மேம்பாலம் மற்றும் D mart பகுதிகள் என்னுடைய வரைபடத்தில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். சம்பவ இடத்தின் பகுதியில் இருந்து சர்வீஸ் ரோட்டு வழியாக D-Mart எவ்வளவு தொலைவு இருக்கும் என்றால் சுமார் 700 மீட்டர் இருக்கும். D mart அருகிலோ அல்லது மேம்பாலத்திலோ விபத்து நடக்கவில்லை என்றால் சரிதான். அசா.3,பிச்சைமுத்து மற்றும் அசா.4 சங்கரலிங்கம் ஆகியோர் அசா.1 பாலகிருஷ்ணனின் உறவினர் என்றால் சரிதான். சம்பவ இடத்திற்கு அருகில் உள்ள கடைகளின் வேலை பார்க்கும் நபர்களை கண்ணுற்ற சாட்சியாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். வழக்கு ஆவணங்கள் அனைத்தும் உரிய நேரத்தில் தயார் செய்யப்படவில்லை என்றாலும் பின்னிட்டு தயார் செய்யப்பட்டுள்ளது என்றாலும் அதனால் தான் காலதாமதமாக நீதிமன்றத்தில் அளிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. குற்ற இறுதி அறிக்கையில் குறிப்பிட்டுள்ள சம்பவம் எதுவும் இவ்வழக்கின் எதிரியால் ஏற்படுத்தப்படவில்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கிற்கும் எதிரிக்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. எதிரி மீது தவறாக இறுதிஅறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

C. [signature] 20/7/21

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

[signature]

Judicial Magistrate No.I

Dindigul.